# அப்புவும் முலாம்பழமும்

எழுதியவர்: உஷாராணி சுப்பிரமணியம்
ஓவியர்: ஜேம்ஸ் டான்



நாவில் தமிழ் நாளும் தமிழ்
தமிழ்
Tamil Language Learning & Promotion Committee

ISBN 978-981-18-4714-1
9 789811 847141

**பாலர் பள்ளித் தமிழாசிரியர்களுக்குரிய கலந்தாய்வரங்கம் (2022): அன்பளிப்பு**

**பெரிய புத்தகம் 1**

**ஆலோசகர்கள்**

திருவாட்டி சாந்தி செல்லப்பன்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் செயற்குழு ஆலோசகர்
நிலைய இயக்குநர், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், கல்வி அமைச்சு

திருவாட்டி மும்தாஸ் முகமது காசிம்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் செயற்குழுத் தலைவர்
மூத்த உதவி இயக்குநர், தாய்மொழிகள் துறை, கல்வி அமைச்சு

முனைவர் எஸ். பி. ஜெயராஜதாஸ் பாண்டியன்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழு உறுப்பினர்
தலைமை முதன்மை ஆசிரியர் (தமிழ்மொழி), கல்வி அமைச்சு

முனைவர் சுப்புலெட்சுமி சிங்காரம்
வழிகாட்டு சிறப்பாய்வாளர், தாய்மொழிகள் துறை, கல்வி அமைச்சு

**எழுதியவர்**
திருவாட்டி உஷாராணி சுப்பிரமணியம்
மூத்த சிறப்பாய்வாளர் (தமிழ்மொழி), தாய்மொழிகள் துறை, கல்வி அமைச்சு

**நூலாக்கக் குழுவினர்**
திருவாட்டி கௌரி சத்தியமூர்த்தி
திருவாட்டி உஷாராணி குப்புசாமி
திருமதி அருள்மதி லெனின்
தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் செயற்குழு உறுப்பினர்கள்

**© 2022 Tamil Language Learning and Promotion Committee**
Ministry of Education, Singapore
MOE Building
1 North Buona Vista Drive
Singapore 138675

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the Tamil Language Learning and Promotion Committee, Ministry of Education, Singapore.

Published by Child Educational Co. Pte Ltd
Strictly not for sale.

ISBN 978-981-18-4714-1

# அப்புவும் முலாம்பழமும்

எழுதியவர்: உஷாராணி சுப்பிரமணியம்
ஓவியர்: ஜேம்ஸ் டான்



அப்பு தன் குடும்பத்தாருடன் காட்டில் வாழ்ந்து வந்தது.





அப்புவின் குடும்பத்தில் அதன் அம்மா, பெரியம்மா, சின்னம்மா, அண்ணன், அக்கா எனப் பலரும் இருந்தனர்.




அண்ணா, நாம் சேர்ந்து விளையாடுவோமா?
இன்று என்னால் முடியாது, அப்பு. நாளை விளையாடலாம்.




அக்கா, நாம் சேர்ந்து விளையாடுவோமா?
இப்போது என்னால் முடியாது, அப்பு. பிறகு, விளையாடலாம்.

யாரும் அப்புவோடு விளையாட வரவில்லை. அதனால், அப்புவுக்கு வருத்தமாக இருந்தது.






மரத்தில் குருவிக்கூடு ஒன்று இருந்தது. அதில் கிளி ஒன்று, முட்டைகளை அடைகாத்துக்கொண்டு இருந்தது.




கிளியே, கிளியே! என்னோடு விளையாடுகிறாயா?
இன்று என்னால் முடியாது, அப்பு. நான் என் முட்டைகளை அடைகாக்க வேண்டும்.




முட்டைகளை அடைகாக்க வேண்டுமா?
முட்டைகளை அடைகாத்தால்தான் குஞ்சுகள் வெளியே வரும். பின்னர், என் அருமை கிளிக்குஞ்சுகள் என்னுடன் கொஞ்சி விளையாடும்.

கிளி அப்புவோடு விளையாட மறுத்துவிட்டது. அப்புவுக்கு வருத்தமாக இருந்தது.



தொலைவில் உடும்பு ஒன்று தன் முட்டைகளை அடைகாத்துக்கொண்டு இருந்தது.










உடும்பும் கிளியும் தன்னோடு விளையாட மறுத்ததால் அப்பு வருத்தமடைந்தது.



அருகில் முலாம்பழங்கள் காய்த்திருந்தன.






